**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.439/2023**
**Prosecution Witness – PW.6**

| | |
|---|---|
| Name | :திரு. ஞானசிகாமணி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

(A1, A3 and A4 are present.)

<u>முதல் விசாரணை</u>–

நான் காவல் துறை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வ பெற்றுள்ளேன். கடந்த 16.06.2018 ம் தேதி இரணியல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இருக்கும் போது வில்லுக்குறி அஞ்சல் சடையப்பர் கோவில் தெரு இராமச்சந்திரன் என்பவர் மகன் விஜிக்குமார் நிலையம் ஆஜர் ஆகி காலை 11.00 மணியளவில் நிலையம் ஆஜர் ஆகி அளித்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப இரணியல் காவல் நிலைய குற்ற எண்.282/2018 u/s 294(b), 307, 506(2) IPC மற்றும் பிரிவு 3 TNPPDL Act ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகரையும் சேர்த்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியல் நீதிமன்றத்திற்கும், ஏனைய நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகரிகளுக்கும், விசாரணை நகலை மணவாளக்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளர், பொறுப்பு இரணியல் காவல் நிலையம் அவர்களுக்கும் விசாரணைக்காக வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்ததுதான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**